بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّی عَلٰی رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰی عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

**பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபாக்களின் வாழ்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபதுல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாயிலில் 07 ஜுன் 2019 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:

இன்றிலிருந்து மீண்டும் பத்ர் சஹாபாக்களின் சம்பவங்களை நான் எடுத்துக் கூறுவேன். இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற முதலாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் முஅதிப் பின் உபைத் ரலி அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்களின் தாய் வழி சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் மற்றும் ஹஸ்ரத் முஅதிப் பின் உபைத் பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கு பெற்றார்கள் மேலும் ரஜீஃ சம்பவ நாள் அன்று இரு சகோதரர்களும் ஷஹீது ஆனார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 3 ன் இறுதியில் அஸ்ல் மற்றும் காரா கோத்திரத்தின் சில மனிதர்களுக்கு மார்க்கத்தின் சில விசயங்கள் கற்றுக்கொடுக்க மற்றும் குர்ஆன் கரீம் மற்றும் இஸ்லாமிய ஷரியத்தின் போதனைகள் கற்பிக்க அனுப்பிய ஆறு சஹாபாக்களில் சில அறிவிப்புக்கேற்ப பத்து சஹாபாக்களில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்களும் இருந்தார்கள். இந்த மக்கள் ரஜீஃ என்ற இடத்தை அடைந்த போது ஹிஜாஸில் ஒரு ஊற்று உள்ளது அது ஹஸேல் கோத்திரத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளதாகும் இவர்கள் மீது ஹஸேல் சமுக மக்கள் அநீதி இழைத்தவர்களாக இந்த சஹாபாக்களை சுற்றி வளைத்தனர். மேலும் கிளர்ச்சி செய்தவர்களாக போர் செய்தனர். அவர்களின் ஏழு சஹாபாக்களின் பெயர் இதுவாகும்: ஹஸ்ரத் ஆஸிம் பின் சாபித், ஹஸ்ரத் முர்சத் பின் அபுமுர்சத், ஹஸ்ரத் குபைப் பின் அதி, ஹஸ்ரத் காலித் பின் பகீர் , ஹஸ்ரத் ஸைத் பின் தஸ்னா, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக், ஹஸ்ரத் முஅதிப் பின் உபைத் ஆவார்கள். இவர்களில் ஹஸ்ரத் முர்சத் ஹஸ்ரத் காலித் ஹஸ்ரத் ஆஸிம் மற்றும் ஹஸ்ரத் முஅதிப் பின் உபைத் ஆகியோர் அவ்விடத்திலேயே ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் குபைப் மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் மற்றும் ஹஸ்ரத் ஸைத் ஆகியோர் ஆயுதத்தை கீழே போட்டதினால் நிராகரிப்பவர்கள் இவர்களை கைது செய்து மக்காவின் பக்கம் கொண்டு சென்றனர், மக்காவிற்கு ஐந்து மையில் தொலைவில் உள்ள ஸஹ்ரான் என்ற பள்ளத்தாக்கை அவர்கள் அடைந்த போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் தமது கையை கயிற்றிலிருந்து விடுவித்து வாளை எடுத்துக்கொண்டார்கள், இந்த நிலையை கண்ட இணைவைப்பாளர்கள் அவரை விட்டு விலகி அவர்கள் மீது கல் எறிய தொடங்கினர் எதுவரை எனில் அதனால் அவர்கள் ஷஹீதானார்கள் மேலும் அன்னாரின் கபர் ஸஹ்ரானில் உள்ளது . ரஜீஃ சம்பவம் ஹிஜ்ரத்துக்கு பின் 36 ஆவது மாதத்தில் ஸஃபர் மாதம் நடைபெற்றது.

ரஜீஃ சம்பவம் தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி நான்கில் தமது பத்து சஹாபாக்களின் குழுவை ஆயத்தம் செய்து அவர்களுக்கு ஆஸிம் பின் சாபித் அவர்களை அமீராக நியமித்து அவர்கள் மறைவாக மறைவாக மக்காவிற்கு அருகில் சென்று குரைஷிகளின் நிலையை அறிந்து கொள்ள வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். இக்குழு புறப்படும் முன்னர் அஸ்ல் மற்றும் காரா கோத்திரத்தின் சில மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அவையில் வந்து, எங்கள் கோத்திரத்தின் அதிகமான மக்கள் இஸ்லாத்தின் பக்கம் ஆர்வம் உடையவர்களாக இருக்கின்றனர், எங்களுடன் சிலரை நீங்கள் அனுப்புங்கள் நாங்கள் முஸ்லிமாக ஆகுவதற்கு அவர்கள் எங்களுக்கு இஸ்லாத்தை பற்றி கூறவேண்டும் எனக் கேட்டனர்.ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவின் நிலையை அறிந்துவர ஆயத்தம் செய்திருந்த அந்த குழுவை இவர்களுடன் அனுப்பிவைத்தார்கள். ஆனால் இந்த மக்கள் பொய்யர்களாக இருந்தனர்.

மேலும் பனு லஹ்யான் கூறியதற்கிணங்க மதினா வந்தனர் இவர்கள் தம் தலைவர் சுஃப்யான் பின் காலிதின் கொலைக்கு பழிவாங்க வேண்டும் இதன் மூலம் சில முஸ்லிம்கள் மதினாவை விட்டு வெளியே வந்தால் அவர்களை தாக்குவதற்கு இந்த சூழ்சியை செய்தனர் மேலும் அஸ்ல் மற்றும் காரா மக்களின் இந்த செயலுக்கு கூலியாக அதிக ஒட்டகங்கள் பரிசாக பனு லஹ்யான் நிர்னயித்திருந்தது, அஸ்ல் மற்றும் காரா வின் இந்த ஏமாற்றுகார மக்கள் உஸ்ஃபான் மற்றும் மக்காவிற்கு இடையில் வந்த போது முஸ்லிம்கள் எங்களுடன் வருகின்றனர் பழிவாங்க வாருங்கள் என்று பனு லஹ்யானுக்கு அவர்கள் மறைவாக தகவல் கொடுத்தனர். இதனடிப்படையில் பனு லஹ்யான் கோத்திரத்தின் இருநூறு இளைஞர்கள் அவர்களில் நூறு பேர் அம்பு எய்பவர்களாக இருந்தனர். அவர்கள் முஸ்லிம்களை எதிர்கொள்ள புறப்பட்டனர்.

அதாவது அவர்கள் அழைத்ததினால் வந்துவிட்டனர் மேலும் ரஜீஃ எனும் இடத்தில் அவர்களின் தாக்குதல் உருவானது. அவர்கள் தாக்குதலுக்கு ஆயத்தமாக மதிநுட்பமாக அருகில் உள்ள குன்றில் ஏறிக்கொண்டனர். நிராகரிப்பாளர்கள் ஏமாற்றுவது ஒன்றும் பெரிய விசயம் அல்ல நீங்கள் மலையிலிருந்து கீழே இறங்கி வாருங்கள் உங்களை கொலை செய்யமாட்டோம் என்ற மிக உறுதியான வாக்குறுதியை தருகிறோம் என்று குரல் கொடுத்தனர். எங்களுக்கு உங்கள் வாக்குறுயின் மீது எந்த நம்பிக்கையும் இல்லை என்று ஆஸிம் அவர்கள் பதில் கொடுத்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் வானத்தின் பக்கம் முகம் உயர்த்தி, இறைவா! நீ எங்கள் நிலைகளை பார்க்கிறாய். உம்முடைய தூதர் அவர்களுக்கு எங்கள் நிலைகளை தெரிவித்து விடு எனக் கூறினார்கள். எவ்வாறிருப்பினும் ஆஸிம் மற்றும் அவர்களின் தோழர்கள் போர் செய்தனர் இறுதியில் போர் செய்தவர்களாக ஷஹீதானார்கள். ஏழு சஹாபாக்கள் கொல்லப்பட்டனர். குபைப் பின் அதி மற்றும் ஸைத் பின் தஸ்னா மற்றும் அப்துல்லாஹ் பின் தாரிக் எஞ்சி இருந்தனர், இவர்களை உயிருடன் பிடிக்க வேண்டும் என்பது நிராகரிப்பாளர்களின் விருப்பமாக இருந்தது. இப்போது கீழே இறங்கி வாருங்கள் உங்களுக்கு எவ்வித தொல்லையும் தரமாட்டோம் என வாக்குறுதி தருகிறோம் என சப்தம் கொடுத்து அழைத்தனர். அந்த மக்கள் அவர்களின் வாக்குறுதியை இந்த முறை நம்பி கீழே இறங்கி வந்தனர். ஆனால் கீழே இறங்கியதும் அவர்களை மரங்களில் கட்டிவிட்டனர். அப்போது அவர்கள் சப்தமாக இது உங்கள் வாக்கு மீறலாகும் மேலும் வேறு என்னவெல்லாம் இனி செய்ய உள்ளீர்கள் என்பது தெரியவில்லை என கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் அவர்களுடன் செல்ல மறுத்துவிட்டார்கள் நிராகரிப்பாளர்கள் சிறிது தூரம் வரை அப்துல்லாஹ்வை இழுத்துக்கொண்டு சென்றார்கள் பிறகு கொலை செய்து அங்கேயே வீசிவிட்டனர்.

ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் தமது கையை விடுவித்து சண்டைக்கு ஆயத்தமானார்கள் அப்போது அவரை அவர்கள் கல் எறிந்து ஷஹீதாக்கினார்கள். குபைப் மற்றும் ஸைதை உடன் அழைத்துக்கொண்டு இந்த மக்கள் மக்காவின் பக்கம் சென்றனர், அங்கு சென்று அவர்களை குரைஷிகளிடம் விற்றுவிட்டனர். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் ரஜீஹ் சம்பவத்தின் போது எவ்வாறு ஷஹீதானார்கள் என்றால் நிராகரிப்பாளர்களுடன் செல்ல மறுத்துவிட்டார்கள் மேலும் அங்கேயே போர் செய்து ஷஹீதானார்கள்.

இரண்டாவது சஹாபி அவரின் பெயர் ஹஸ்ரத் ஆகில் பின் புகைர் ஆகும். ஹஸ்ரத் ஆகில் அவர்கள் பனு சஅத் பின் லைல் கோத்திரத்துடன் தொடர்புடைவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் ஆகில் அவர்களின் பெயர் முன்னர் காஃபில் ஆக இருந்தது ஆனால் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆகில் என்று அவருக்கு பெயர் வைத்தார்கள். அன்னாரின் தந்தை புகைர் அறியாமைக காலத்தில் ஹஸ்ரத் உமர் அவர்களின் பாட்டனார் துஃபைல் பின் அப்துல் உஸ்ஸாவின் தோழமையில் இருந்ததை போன்றே புகைர் மற்றும் அவர்களின் அனைத்து மகன்களும் பனு நஃபீலின் தோழமையில் இருந்தார்கள். ஹஸ்ரத் ஆகில் ஹஸ்ரத் ஆமிர் ஹஸ்ரத் அயாஸ் மற்றும் ஹஸ்ரத் காலித் இந்த நான்கு சகோதரர்களும் புகைரின் மகன்கள் ஆவார்கள் இவர்கள் ஒன்றாக தாருல் அர்கமில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள் மேலும் இவர்கள் அனைவரும் தாருல் அர்கமில் முதன்மையாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் ஆகில் ஹஸ்ரத் காலித் ஹஸ்ரத் ஆமிர் மற்றும் ஹஸ்ரத் அயாஸ் ஹிஜ்ரத்திற்காக மக்காவிலிருந்து மதினாவிற்கு புறப்பட்டபோது அவர்கள் தம்முடைய அனைத்து ஆண் பெண்களையும் ஒன்றினைத்து ஹிஜ்ரத் செய்தார்கள். இவ்வாறு மக்காவில் அவர்களின் வீட்டில் யாரும் எஞ்சியிருக்கவில்லை எதுவரை எனில் அதன் கதவுகள் பூட்டப்பட்டன. அந்த அனைத்து மக்களும் மதினாவில் ஹஸ்ரத் ரஃபாஆ பின் அப்துல் முன்ஸிர் அவர்களிடம் தங்கினார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆகில் அவர்களை ஹஸ்ரத் முபஷ்ஷிர் பின் அப்துல் முன்ஸிர் அவர்களுடன் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். இவர்கள் இருவரும் பத்ர் போரில் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் ஆகில் அவர்கள் பத்ர் போர் நாளில் 34 வயதில் ஷஹீதானார்கள்.அவர்களை மாலிக் பின் ஸஹீர் ஜோஸ்மி ஷஹீதாக்கினான். இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் அயாஸ் மற்றும் அவர்களின் சகோதர்கள் ஹஸ்ரத் ஆகில் ஹஸ்ரத் காலித் ஹஸ்ரத் ஆமிர் ஆகியோரை தவிர வேறு நான்கு சகோதரர்கள் பத்ர் போரில் ஒன்றாக கலந்து கொண்டதாக எங்களுக்கு தெரியவில்லை.

ஸைத் பின் அஸ்லம் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுவதாவது அபு பகைரின் மகன்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! எங்கள் சகோதரியை இன்ன நபருக்கு நிக்காஹ் செய்து வையுங்கள் எனக் கூறினார்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிலால் தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்? எனக் கேட்டார்கள், அவர்களுக்கு ஹஸ்ரத் பிலால் (ரலி) மீது திருப்தி இல்லாததினால் திரும்பி சென்றுவிட்டார்கள். இரண்டாவது முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! எங்கள் சகோதரியை இன்ன நபருக்கு நிக்காஹ் செய்து வையுங்கள் எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிலால் தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்? எனக் கேட்டார்கள்,இந்த முறையும் அவர்கள் மீண்டும் திரும்பி சென்றுவிட்டார்கள், பிறகு அவர்கள் மூன்றாவது முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! எங்கள் சகோதரியை இன்ன நபருக்கு நிக்காஹ் செய்து வையுங்கள் எனக் கூறினார்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிலால் தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்? எனக் கேட்டுவிட்டு சுவர்க்கவாசியான அவரைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள்? என்றும் கேட்டார்கள். அப்போது அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுடன் தமது சகோதரியை நிக்காஹ் செய்து வைத்தனர்.

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா ஆகும். இவருடைய தந்தை பெயர் ஹாரிஸா பின் ஷர்ஹீல் மற்றும் ஹாரிஸா பின் ஷர்ஹபீல் என்றும் கூறப்படுகிறது. அன்னார் பனூ குஸாஆ கோத்திரத்தை சார்ந்தவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் ஸைது சிறு வயதை உடையவராக இருந்த போது அவரின் தாய் அவரை அழைத்துக்கொண்டு தம் தாய் வீட்டுக்குச் சென்றார்கள் அவ்வழியாக பனு கைன் படை சென்று கொண்டிருந்தது. பயணத்தின் நடுவே தங்க போடப்பட்ட கூடாரத்தின் முன் இருந்த ஸைதை அவர்கள் தூக்கிகொண்டனர் மேலும் அடிமையாக்கி அவ்காஸ் சந்தையில் ஹகீம் பின் ஹிஸாமிற்கு நாநூறு திர்ஹமிற்கு விற்றுவிட்டனர். ஹகீம் பின் ஹிஸாம் தமது மாமி கதீஜா பின்த் குவைலித் அவர்களிடம் ஹஸ்ரத் ஸைதை ஒப்படைத்தார்கள்.

பின்னர் ஹஸ்ரத் கதீஜா அவர்கள் தமது அனைத்து அடிமைகளுடன் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள். ஹஸ்ரத் ஸைது அவர்கள் தொலைந்து போனதால் அன்னாரின் தந்தை ஹாரிஸா பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானார்கள். சில காலத்திற்கு பின்னர் பனூ கல்பின் சில மனிதர்கள் ஹஜ் செய்ய மக்கா வந்தபோது அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி) அடையாளம் கண்டுகொண்டனர். அவர்களிடம், ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் கூறினார்கள், நான் கஃபாவின் அருகில் பனூ மஆதின் ஒரு உயரிய குடும்பத்தில் இருக்கிறேன் எனவே நீங்கள் கவலை கொள்ள வேண்டாம் என்று என் குடும்பத்தாருக்கு என்னை பற்றிய தகவலை தெரிவித்து விடுங்கள். பனூ கல்பின் மக்கள் சென்று அன்னாரின் தந்தைக்கு தகவல் கொடுத்தனர் அப்போது அவர் கஆபாவின் இறைவன் மீது ஆணையாக! அது என் மகன் தானா? எனக் கேட்டார்.

மக்கள் அங்க அடையாளத்தை கூறியதும் அன்னாரின் தந்தை ஹாரிஸாவும் சிறிய தந்தையும் கஅப் அவர்களும் மக்கா நோக்கி புறப்பட்டனர். மக்காவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்து ஃபித்யாவைப் (பணயத்தொகையை) பெற்றுக்கொண்டு ஹஸ்ரத் ஸைதை விடுதலை செய்யுமாறு விண்ணப்பம் வைத்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைதை அழைத்து அவர்களின் விருப்பத்தையும் கேட்டார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் தம் தந்தை மற்றும் சிறிய தந்தை உடன் செல்ல மறுத்துவிட்டார்கள்.

இந்த சம்பவத்தை விரிவாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்து கூறுகிறார்கள்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், நான் அனைத்து அடிமைகளையும் விடுதலை செய்கிறேன் என்ற இந்த அறிவிப்பை செய்ததும் அனைத்து அடிமைகளும் சென்றுவிட்டனர் நபி (ஸல்) அவர்களின் மகன் என பின்னர் பிரபலமான ஸைது பின் ஹாரிஸா மட்டும் செல்லவில்லை அவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார்கள்: நீங்கள் என்னை விடுதலை செய்துவிட்டீர்கள் ஆனால் நான் சுதந்திரம் பெற விரும்பவில்லை, நான் உங்களுடன் இருந்து விடுகிறேன் என்றார்கள், அவரிடம் நபி (ஸல்) அவர்கள்: ஊருக்கு செல்லுங்கள் மேலும் தம் சொந்தங்களை சந்தியுங்கள், இப்போது நீங்கள் சுதந்திரமானவர் என்றார்கள்.

ஆனால் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள்: நான் உங்களிடம் எந்த அன்பு மற்றும் மனத்தூய்மையை கண்டேனோ அதன் காரணமாக தாங்கள் எனக்கு மற்றனைவரை விட அதிக அன்பிற்குரியவர் ஆவீர்கள் என்றார்கள். ஹஸ்ரத் ஸைது அவர்கள் வசதியான ஒரு குடும்பத்துடன் தொடர்புடைவர்களாக இருந்தார்கள் ஆனால் சிறு வயதில் கொள்ளையர்கள் அவரை தூக்கிவந்து விற்றுவிட்டனர் இவ்வாறு சுற்றித்திரிந்து இவர்கள் ஹஸ்ரத் கதீஜாவிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்களின் தந்தை மற்றும் சிறியதந்தை அவரை தேடியவர்களாக நபி (ஸல்) அவர்களிடம் வந்து, நாங்கள் உங்களது நல்இயல்பு மற்றும் இரக்ககுணத்தை அறிந்து வந்திருக்கிறோம் உங்களிம் எங்கள் மகன் அடிமையாக இருக்கிறார், அவருக்குரிய தொகையாக தாங்கள் கேட்பதை நாங்கள் தருவதுற்கு ஆயத்தமாக இருக்கிறோம் தாங்கள் அவரை விடுதலை செய்து விடுங்கள் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்கள் மகன் எனக்கு அடிமை இல்லை நான் அவரை விடுதலை செய்துவிட்டேன் என்றார்கள்.

பிறகு ஸைதை அழைத்தார்கள், உங்கள் தந்தை மற்றும் சிறியதந்தை உங்களை அழைத்துச் செல்ல வந்துள்ளார்கள், நான் உங்களை விடுதலை செய்துவிட்டேன் நீங்கள் எனது அடிமை இல்லை எனவே நீங்கள் அவர்களுடன் போகலாம் என்றார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் கூறினார்கள்: தாங்கள் என்னை விடுதலை செய்துவிட்டீர்கள் ஆனால் நான் என்னை உங்கள் அடிமையாகவே நினைக்கிறேன் நான் சுதந்திரமாக விரும்பவில்லை என்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீண்டும் கூறினார்கள் உங்கள் தாய் பெரும் வேதனையில் இருக்கிறார்கள்.

மேலும் உங்கள் தந்தை மற்றும் சிறியதந்தை எவ்வளவு தூரத்திலிருந்து எவ்வளவு சிரமப்பட்டு உங்களை அழைத்து செல்ல வந்திருக்கிறார்கள் என்பதை பாருங்கள். நீங்கள் அவர்களுடன் செல்லுங்கள் என்றார்கள். ஸைதின் தந்தையும் சிறியதந்தையும் அதிகமாக புரியவைத்தனர். ஆனால் ஹஸ்ரத் ஸைது அவர்களுடன் போக மறுத்துவிட்டார்கள் மேலும் கூறினார்கள்: சந்தேகத்திற்கு இடமின்றி நீங்கள் எனது தந்தை மற்றும் சிறியதந்தை ஆவீர்கள் உங்களுக்கு என்மீது அன்பு உள்ளது ஆனால் அன்னாருடன் எந்த உறவு எனக்கு ஏற்பட்டுள்ளதோ அது இப்போது முறியாது, இவரை விட்டு பிரிந்து என்னால் உயிர் வாழ முடியாது. ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் இந்த விசயங்களை கூறியதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறை இல்லம் கஅபாவிற்கு சென்று இவ்வாறு அறிவிப்பு செய்தார்கள்: ஸைது அவர்கள் இவ்வித அன்பை நிரூபித்ததின் காரணமாக அவர் இன்றிலிருந்து எனது மகன் ஆவார். இதன் காரணமாக ஸைது அவர்களின் தந்தையும் சிறியதந்தையும் மகிழ்ச்சியாக திரும்பி சென்றனர் ஏனெனில் அவர் மிகவும் நிம்மதி மற்றும் சந்தோஷமாக வாழ்கையை கழிக்கிறார் என்பதை அவர்கள் கண்டுகொண்டனர்.ஆக இது ஹஸ்ரத் முஹம்மது ரஸூல்லுல்லாஹ் (ஸல்) அவர்களின் மிகஉயரிய நல்லொழுக்கத்தின் சான்று ஆகும் , ஸைது அவர்கள் நன்றி உணர்வை வெளிப்படுத்திய போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கருணையின் அசாதாரண சான்றை வெளிப்படுத்தினார்கள்.

இந்த சம்பவம் தொடர்பாக சீரத் காத்தமன் நபிய்யீனில் இந்த விசயமும் வருகிறது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவர் எனது வாரசு ஆவார் மேலும் நான் அவரின் வாரிசு ஆவேன். அந்நாளிலிருந்து ஹஸ்ரத் ஸைது அவர்கள் ஸைது பின் முஹம்மது (அதாவது முஹம்மதின் மகன் ஸைது) என்று அழைக்கப்பட்டார்கள், ஆனால் ஹிஜ்ரதிற்கு பின்னர் வளர்ப்பு மகன் ஆக்குவது தடுக்கப்பட்டுள்ள இறைவனின் இந்த கட்டளை வந்த பின்னர் ஸைது பின் ஹாரிஸா என்று அவர்கள் மீண்டும் அழைக்கப்பட்டார்கள்,ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நடைமுறை மற்றும் அன்பு அந்த நன்றியுணர்வுள்ள சேவகரிடம் முன்நாளில் இருந்ததை போலவே இருந்தது. இன்னும் சொல்வதென்றால் நாளுக்குநாள் அதிகரித்து கொண்டே சென்றது.

மேலும் ஸைது அவர்களின் மரணத்திற்கு பிறகு அவர்களின் மகனும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பணிபெண் உம்மு அய்மன் அவர்களின் மகனுமாகிய உஸாமா பின் ஸைது அவர்களுடனும் அன்னாரின் (ஸல்) நடைமுறையும் அன்பும் அதே போன்று இருந்தது. ஸைது அவர்களின் மேன்மைகளில் ஒரு மேன்மை சஹாபாக்களில் இவரின் பெயர் மட்டுமே திருக்குர்ஆனில் மிக தெளிவாக வந்திருப்பதாகும்.ஹஸ்ரத் ஜப்லா இவர் ஹஸ்ரத் ஸைது அவர்களின் அண்ணன் ஆவார்கள், ஒரு முறை அவர்களிடம், உங்கள் இருவரில் யார் பெரியவர் என கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், ஸைது என்னை விட பெரியவர் ஆவார் நான் அவருக்கு முன்னால் பிறந்துவிட்டேன் என கூறினார்கள். அவருடைய கூற்றின் பொருள் ஹஸ்ரத் ஸைது இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதில் முந்திக்கொண்டதின் காரணமாக அவரை விட மேலானவர் என்பதாகும். ஹஸ்ரத் பராஃ கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ஸைது அவர்களிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அன்த இக்வனா வ மவ்லானா அதாவது நீர் எனது சகோதரர் ஆவீர் மேலும் எனது நண்பர் ஆவீர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் : நபி (ஸல்) அவர்களுடன் மிக அதிக தொடர்பு வைக்கும் சந்தர்ப்பம் நான்கு மனிதர்களுக்கு கிடைத்திருந்தது, அன்னார் (ஸல்) அவர்களின் மனைவி ஹஸ்ரத் கதீஜா, அன்னாரின் தந்தையினுடைய சகோதர் மகன் அலி, அன்னாரால் விடுதலை செய்யப்பட்ட அடிமை ஸைது , மற்றும் அன்னாரின் நண்பர் அபூபக்ர் மேலும் இவர்கள் அனைவரின் ஈமானுக்கும் சான்று அப்போது நபி (ஸல்) அவர்கள் பொய் கூற மாட்டார்கள் என்பதாக இருந்தது. தாயிஃப் பயணத்தின் போதும் ஹஸ்ரத் ஸைது அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். அங்கு சகீஃப் கோத்திர மக்கள் குடியிருந்தனர்.ஹஸ்ரத் அபூதாலிப் மரணித்த பின்னர் குரைஷிகள் மீண்டும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது அநீதி இழைக்கத் தொடங்கினார்கள் அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸாவை உடன் அழைத்துக்கொண்டு தாயிஃப் சென்றார்கள். இது நுபுவத்தின் 10 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவமாகும். மேலும் ஷவ்வால் மாதத்தின் சில நாட்கள் எஞ்சி இருந்தன அவர்கள் தாயிஃபில் பத்து நாற்கள் வரை தங்கியிருந்தனர் அப்போது தாயிஃபின் அனைத்து கோத்திர தலைவர்களிடமும் அன்னார் சென்றார்கள். ஆனால் அன்னாரின் அழைப்பை எவரும் ஏற்றுக்கொள்ள வில்லை. அப்போது இவர்களின் இளைஞர்கள் அன்னாரின் அழைப்பை ஏற்றுக்கொள்வார்கள் என்ற அச்சம் தோன்றியதால், அவர்கள் முஹம்மதே (ஸல்) ! எங்கள் நகரத்தை விட்டு வெளியே சென்றுவிடுங்கள், உங்கள் அழைப்பு ஏற்றுக் கொள்ளபட்ட அந்த இடத்திற்கு சென்று தங்குங்கள் என்று கூறினார்கள், பிறகு அன்னாருக்கு எதிராக தீயவர்களை தூண்டியதினால் அவர்கள் அன்னார் மீது கல் எறிந்தனர் அதனால் அன்னாரின் இரு பாதங்களிலும் இரத்தம் வடிந்தோடியது, ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது எறியப்படுகிற கற்களை தம்மீது ஏந்த முயற்சித்து கொண்டு இருந்தார்கள் இதனால் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களின் தலையிலும் எண்ணற்ற காயங்கள் ஏற்பட்டன.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்; இதன் விளக்கம் இன்னும் இருக்கிறது இன்ஷா அல்லாஹ் இனிவரும் குத்பாவில் எடுத்துக்கூறுவேன்.

மொழியாக்கம்:- முஅல்லிம் M.ஷாஜஹான்